**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**
**<u>OS.No.83/2024</u>**

**தேதி: 31.10.2025**

பெயர் : பெரியசாமி (வா.சா.1) த/பெ: ராசு

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு 25.02.2008ம் தேதி கிரையம் செய்து கொடுத்த நபர் தான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த நபர் என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு நிலம் கிரையம் செய்து கொடுத்தாரோ அதே அளவுள்ள நிலத்தை தான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் நான் தான் வாங்கி கொடுத்தேன் அளவு கொஞ்சம் கம்மியாக இருக்கும். நான் வாங்கிய நிலமும் 1ம் பிரதிவாதி வாங்கிய நிலமும் தற்போது வரை அளவீடு செய்யவில்லை என்றால் அளந்து தான் கிரையம் வாங்கினோம். கிரையம் வாங்கிய பிறகு நானும் 1ம் பிரதிவாதியும் கிரைய சொத்துகளை நில அளவையரை வைத்து அளக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பலமுறை அளக்க முயற்சி செய்தும் நான் அதை தடுத்துவிட்டேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP.No.16255/2023 என்ற மனுவை தாக்கல் செய்து நிலத்தை அளப்பதற்காக எனக்கும் வருவாய்துறைக்கும் எதிராக உத்தரவு பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் அளக்ககூடாது என்று கூறினேனா என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் அளக்கவேண்டாம் என்று கூறினேன். மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுபடி அளக்க நிலஅளவையர் வந்தபோது நான் அளக்கவேண்டாம் என்று கூறியதால் சென்றுவிட்டார்கள் என்றால் அவர்கள் அளக்கவரவில்லை, போனில் கேட்டார்கள் நான் வரவேண்டாம் என்று கூறினேன் சென்றுவிட்டார்கள். நான் கருப்பம்பட்டியில் குடியிருக்கிறேன். கருப்பம்பட்டிக்கும் வழக்கு சொத்துக்கும் 10 கி.மீ தூரம் இருக்கும் என்றால் இல்லை 2 கி.மீ தூரம் இருக்கும். நான் ஆடு, மாடு வைத்துள்ளேன். ஆடு, மாடுகளை கருப்பம்பட்டி கிராமத்தில் கட்டி வைத்துள்ளேன் என்றால் தற்போது கட்டி வைத்துள்ளேன். வழக்கு சொத்தில் மின் இணைப்பு உள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்தில் வீட்டுவரி ரசீது இல்லை என்றால் உள்ளது. பிரதிவாதி என்

நிலத்திற்கு வரி ரசீது போட்டுஇருந்தார்கள் அவ்வாறு ஏன் போட்டுள்ளார்கள் என கேட்டு தற்போது என் பெயரில் ரசீது போட்டுள்ளேன். வழக்கு சொத்து உள்ள விலாசத்திற்கு என் பெயரில் ஆதார் அட்டை இல்லை என்றால் சரிதான் ஆதார் கார்டு இல்லை, அந்த வீடு கட்டி முடிக்கப்படவில்லை. நான் நீதிமன்றத்தில் என் வீட்டை காலி செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் மதுரை நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நான் இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, எனக்கு உயர்நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் வரவில்லை. மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலத்தை அளக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு அதை மறுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு போட்ட சொத்து பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது எனவும் அவர்கள் தான் மாடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சமீபகாலமாக அவர்கள் உள்ளார்கள். நானும் பிரதிவாதியும் ஒரே தரப்பினர்களிடம் கிரையம் வாங்கும்போது கிரைய சொத்துகள் ஆளுக்கு சரிபாதி என கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல. உண்மையாகவே வழக்கு சொத்து என்னுடையதாக இருந்தால் முன்பாகவே நான் பிரதிவாதிகள் மீது வழக்கு கொடுத்தும் காவல்துறையில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுத்திருப்பேன் எனவும் பிரதிவாதிகள் சொத்து என்பதால் சும்மா இருந்துவிட்டேன் என்றால் சரியல்ல, நான் காவல்துறையில் புகார் கொடுத்தேன். நான் காவல்துறையில் புகார் கொடுத்த விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் போட்டுள்ள வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.